346

17 JUL 1931

Registered No. M. 2445.

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற்
கழகத்தினின்றுவரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கில ஆண்டு கார்த்திகைத்திங்கள் 1929—நவம்பர். | இதழ் கக

க. ஸ்ரீபசவேச விஜயம் :—

உ. கயிலைநாதன் அல்லமனைப் புகழ்தல் :—

ந. சிவநிர்மாலியஸ்வீகாரம் :—

ச இலிங்கதாரண வைதீகத்துவம் :—

ரு. சோணசைலமாலை :—

சு. வடநாட்டு நிகழ்ச்சிகள் :—

எ. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள் :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரையர்,
'வீரசைவநிலையம்' முசிரி, திருச்சிஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

நன்கொடை.

திருவையாறு பூசைப்படித்துறை அறுபத்துமூவர் மடாலயம் தலைவர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளவர்கள் நமது வீரசைவமென்னுந் திங்கள் வெளியீடு இறைவனருளால் இடையூறின்றி உலகெலாம்போற்றும்படி நின்று நிலவுக என அன்போடளைந்த வாழ்த்துரை கூறி நன்கொடையாக ரூ. 25-0-0 அனுப்பிவைத்துள்ளார்கள். அவர்களது நன்கொடையையும், வீரசைவாபிமானத்தையும், இதற்குப் பல்லாற்றானும் உதவிபுரிவதாக வாக்களித்த வுறுதியையும் இதன் நிறைவேற்றற் கழகத்தார் பெருமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு பாராட்டுகின்றனர். இங்ஙனம் பலரும் முன்வந்து உதவி புரிவார்களாயின் தமிழ் நாட்டில் வீரசைவ சமயம் முன்னேற்றமடைந்து விளங்குறுமென அறிஞர் தங்கருத்திற் சிந்திப்பாராக,

நமது வீரசைவத்தின் தொண்டர்களுள் ஒருவரும், அபிமானசீலருமாகிய வடார்க்காடு ஜில்லா புதுப்பேட்டையிலிருக்கும் திருவாளர் S. A. ருத்திரப்பா அவர்கள் 4-10-29ல் தமது செல்வக்குமாரனுக்கு இராஜசேகரன் என்னும் நாமகரணஞ் சூட்டிய ஜாதகர்மவைபவத்தின் ஞாபகார்த்தமாக நமது மகாசங்கத்திற்கு நன்கொடையாக ரூ. 1-0-0 அனுப்பிவைத்துள்ளார்கள். இராசிபுரம் னேடிவ்டாக்டர் திருவாளர் பழனிச்சாமி ஐயரவர்கள் நவராத்திரியில் நடைபெற்ற சரஸ்வதி பூஜையின் ஞாபகார்த்தமாக நமது பத்திரிகைக்கு நன்கொடையாக ரூ. 1-0-0 அனுப்பிவைதுள்ளார்கள். இவர்கட்கு எல்லா நன்மையு முண்டாகுக.

ஸ்ரீ வீரபத்திரசுவாமி தேவாலயச் சீர்திருத்தம்.

சித்தூர் ஜில்லா அகிராஜகிரியை யடுத்த குள்ளம்பல்லே என்னுந் தலத்தில் வீரசைவ ஜங்கமர் குலகுருவான ஸ்ரீமத் வீரகுருசாமிகள் மடாலயத்திலுள்ள ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரசாமியின் தேவாலயம் இலமாயிருப்பதாயும், தத்காலம் ஒன்றரை வருடமாகத் திருப்பணி நடப்பதாயும், அங்குள்ள வீரசைவாபிமானமுள்ள மகா-ா-ஸ்ரீ அரங்கய்ய நாயுடவர்கள் ரூ. 500 நன்கொடைசெய்து மேற்படி ஆலயத்தின் பணியைக் கண்காணித்து வருவதாயும், சுமார் பன்னீராயிரம் ரூபா செலவில் இரண்டு வருஷத்தில் திருப்பணி வேலை முடிவுபெறு மென்றும் அவ்வூர் வீரசைவ மாணவர் A. வீரபத்திரய்ரென்பவர் அறிவிக்கின்றார். அப்பணி நன்கு நிறைவேறுக.

17 JUL 1931

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால் தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றுக் கழகத்தினின்று வரும் செந்தமிழ்த்திங்கள் வெளியீடு.

மலர் க	சுக்கிலஆண்டு ஐப்பசித்திங்கள் 1929—நவம்பர்.	இதழ் கக

ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர் G. C. வீரப்பா B. A., L. L. B, அவர்கள்.

(முன் தொடர்ச்சி.)

கர்நாடக தேயத்தின் நிலைமை.

கவின்பல நிறைந்த கர்நாடகதேயமாகிய விண்ணகத்தேதோன்றி, உண்மையுணர்ச்சியாகிய தண்ணென்ற நிலவொளியால் அக்காலத்தே அங்கண் பரவியிருந்த மதத்துவேஷமாகிய பேரிருளைப்போக்கி, வெண்பிறை மதிபோல் விளங்காநின்றார் நம்பசவேசர் எனவே அறிஞர்யாரும் அவர்பால் அன்பு பாராட்டி அகமகிழ்வாராயினர்; ஏனெனில் அப்பொழுது கர்நாடகத்தின் நிலைமையும், அதனைச்சீர்திருத்து முறையில் ஊக்கங்கொண்டு நின்ற அவரது மனோநிலையும் அங்ஙனமகிழ இடந்தந்தன.

அவர்காலத்தில் கர்நாடகதேயமெங்கும் மதத்துவேஷமென்னும் கொடிய நோய் பரவியிருந்தது. மக்களனைவரும் மதங்களின் உண்மைக்கொள்கைகளை அறவேமறந்தனர். ஓர்குறிப்பிட்ட நகரத்தையடைதற்குப்பலவூர்களிலிருந்து பலவழிகள் ஏற்பட்டிருப்பதுபோல குணங்குறி கடந்த எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளுடைய திருவடியை யடைதற்கு அவரவர் கருத்திற்கேற்ப ஏற்படுத்திய வழிகளே பல மதங்கள் என்னும் உண்மையை அறியாராயினர். என்மதம் பெரிது உன்மதம் சிறிதெனப் போராடத் தொடங்கினர். கடவுள்

கருணைக்கடலாயுள்ளாரென்பதையும், அவர் எல்லாவுயிர்க்குந்தந்தையாயுள்ளா ரென்பதையும், அவரது மக்களாகிய வுயிர்களைப்பிறர் துன்புறுத்துவதில் அவர்க்குச்சிறிதும் விருப்பமிராதென்பதையும் ஆராயாது மறந்து விடுத்தனர்.

மதத்தின் பெயரால் ஒருவரைக்கொல்வதும் புண்ணியம் என்னுங்கொடிய கொள்கை சில சமயத்தார் மனதைக் கவர்ந்திருந்தது. சிறுகுளத்தில் வசிக்குந்தவளை அக்குளத்தையே பெருங்கடலென எண்ணித்தருக்குவதுபோல மற்ற மதங்களின் உண்மையைக்காணுமலேயே தம்மதமே பெரிதெனக்கூறிப் பிறர்மதத்தை யிகழ்ந்துசெருக்குறுவார் சிலர். வெறிகொண்டாற்போல் பிறர்மதங்களைக்கண்டித்து துர்ப்போதனை செய்வதையேதமது காலப்போக்காகக்கழித்தனர் சிலர். கல்வியைப்பெருக்காது கண்டதைக்கற்றுப்பண்டிதனுகிக்கேட்டதைக் கொண்டு பறையடித்து முழக்கி வாதாடுவார்சிலர். இப்படிப்பட்ட போராட்டங்களில் காலத்தைப்போக்கித்தத்தந்தொழின்முறைகளைவிடுத்துக் குடும்பச் செலவிற்காகக் கடன்பட்டு ஏழைகளானுர் பலர்.

குடித்தனக்காரர்களிலோ எண்ணிறந்தோர் காலத்தில் உழவு முதலிய தொழில்களை முறையாகச்செய்யாமல் அகாலங்களில் பயிரிட்டுப்பயனையிழந்து பல்வகையில் துன்புறலாயினர். தேவாலயங்களில் பூசை முதலிய நித்தியங்களும் நடைபெறுமல் தடைபெற்று நின்றன. பல வாலயங்கள் அடைக்கப்பட்டுமிருந்தன. இங்ஙனமிருப்பினும் சிறுதெய்வங்களின் ஆராதனைகள் ஆங்காங்கு மிகுவனவாயின. ஆடுமாடுகளின் கொலைத்தொழில் மிகுவதாயிற்று. சத்தியமாகிய அறக்கடவுள் வேற்றுநாட்டிற்குடியேற பொய், வஞ்சனை, களவு, கள்ளுண்டல் முதலிய தீச்செயல்கள் எங்குங்காணப்பட்டன. இவையனைத்தும் நம்பாரத மாதாவின் மகுடம் கீழ்வீழ்வதற்கான உற்பாதம்போல் காணப்பட்டன. “எக்குலத்திற்பிறந்தயாவரேயாயினும் தம்முடைய நற்கருமத்தால் கடவுளையடையலாம்” என்று போதித்த மகாபுத்தருடைய அருமைக்கொள்கையையும், “அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன், உயிர்செருத்துண்ணுமைநன்று” என்னுந்தேவர்கருத்திற்கிணங்க, சீவகாருணியமொன்றே எவற்றினுஞ்சிறந்து உயர்நிலைக்கண் உய்விக்கத் தக்கதெனக் கூறியஜைனரது கொள்கையையும் கணப்பொழுதேனுங்கருதிச் சிந்திப்பார் இலராயினர். எங்குநோக்கினும் உயிர்க்

கொலேயும், மதவாதமும் மிக நாடு நிலேகலங்கியகலம்போல் நடுங்குவதாயிற்று.

இஃது இங்ஙனமிருப்பப் பெண்களின் நிலேமைபோ மிகக்கவலேக்கிடமாயிருந்தது. அவர்கள் மாடுமுதலிய விலங்கினும் தாழ்ந்த நிலேமையில் எண்ணப்பட்டார்களென்றே சொல்லலாம். இப்படிப்பட்ட பேரிருள் மூடியிருந்த கர்நாடகதேயத்தில் நம்பசவேசராகிய பெருவள்ளல் தோன்றியது கடவுளின் பெருங்கருணேயேயன்றி வேறின்று

உ ப தே ச ம்.

உண்மையான உயிர்க்கண்ணுடன் சமயக்கண்குருடாய் ஒழுகிவந்த மானிடராகிய பசுக்களேக் காப்பாற்ற அன்புடைய ஆயனுய்த் தோன்றிய நம்பசவேசர் இளம்பருவத்திற்றுனே அந்நாட்டினரைச்சீர்திருத்தஞ்செய்தற்கான வேலேகளேச் செய்யத் தொடங்கினர்.

வெயிற்காலத்தில் மனேகரமான மரநிழலின்கண் கால்நடைகள் தாகத்தைத்தீர்த்துக்கொண்டு படுத்து இளேப்பாறும்பொழுது அங்கு விளேயாடிக்கொண்டிருக்கும் இடைச்சிறுவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கும் நம்பசவேசர் உலகநிலேமை, உலக வாழ்க்கை, கடவுளின் தன்மை முதலியவைகளேப்பற்றி யாவருக்கும் விளங்கும்படி உபதேசஞ்செய்யத்தொடங்கினுர். நாள்தோறும் அவருடைய அமுதவாணியைக் கேட்கப்பலரும் திரள் திரளாகக்கூடி நண்பருடனும் மனேவி மக்களுடனும் வருவாராயினர்.

பாம்பாட்டியின் குழலோசையின்முன் கொடியவிடநாகமும் மயங்கி மகிழ்ச்சியுறுவதுபோல அவர்பேசத்தொடங்கினுல் அமுதமுறழ்ந்து ஈரமளேந்த இன்சொல்லால் எப்படிப்பட்டவருடைய மனதிலும் என்றுங்காணுத மகிழ்ச்சிக்குறிபுலப்படுவதாயிற்று. தனக்கென வாழாப்பிறர்க்குரியாளராய் வாழ்வதே அவருடைய கொள்கையாயிருந்தமையால் யாவரும் அவருடைய உபதேசமொழியில் அன்பு செலுத்தி அவர் கூறும் பொருள்களில் நம்பிக்கை வைக்கலாயினர். நாள் செல்ல நேரும்போதெல்லாம் பக்கத்திலிருக்கும் ஊர்களுக்குச்சென்று நல்லொழுக்கத்தைப்பற்றியும், கல்வியின் இன்றியமையாமையைப்பற்றியும், அங்குள்ளார்க்குப் போதித்துவரும் வழக்கத்தையும் அவர் கைக்கொள்ளலாயினர்.

ஓர்நாள் மாலைப்பொழுதில் நம்பசவேசர் யாதோ ஒன்றனைக்கருதி வெளியில் உலாவச்சென்றனர். அங்கு விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்களுடைய கூட்டத்தைக்கண்டனர். அவர்களைக்காணும் விருப்பத்தால் நெருங்குவதற்குள் அச்சிறுவர்களிற்சிலர் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக்கூறிக்கொள்ளும் இழிந்தசொற்கள் காதில் விழவே நமது வள்ளலார் இருகாதுகளையும் கையால் மூடிக்கொண்டு 'ஐயோ! யாதொரு மாசுங்கலப்பில்லாமல் தூய்மையான மனதுடன் பிறந்த இச்சிறுவர்கட்கு ஏன் இச்சீர்கேடான கெட்டநடக்கையுண்டாக வேண்டும்? எனத்தமக்குள் ஆராய்ந்து உடனே தெளிந்து எப்படியாயினும் இவர்களைத்திருத்தல்வேண்டுமெனத்தீர்மானித்து அவர்களைப்போராட்டத்தினின்றும் விலக்கி ஓரிடத்தில் அமரச்செய்து அவர்களைப்பிணிக்கத்தக்க இன்சொற்களால் நற்புத்திபுகட்டலாயினர். (**சிறுவர்க்கான உபதேசம்**) எனதன்பார்ந்த நண்பர்களே! நீங்கள் ஏன் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக்கொள்கின்றீர்கள்? நீங்கள் எல்லோரும் அழகானவுருவத்துடன் காணப்படுகின்றீர்களே. நீங்கள் அமைதியோடு பேசும்பொழுது உங்கள் மொழிகள் குழலோசையினுங்குளிர்ச்சியைத்தருகின்றனவே. வடிவும் வனப்பும் நறுமணமும்வாய்ந்த மலரைக்கண்ணுற்கண்டு மூக்கால் முகர்ந்து இன்பமடைய வேண்டியிருக்க அதனைக்கையாற்பிசைந்து காலாற்சிதைக்கலாகுமா? மலருக்கு மணமும் அழகுங்கொடுத்த கடவுள் உங்கட்கு அழகானவுருவத்தையும், இன்சொல்லையுங்கொடுத்திருக்கின்றாரே! அவற்றை மாறுபடுத்திக் காண்பவர்க்கும் கேட்பவர்க்கும் வெறுப்புண்டாகும்படி நீங்கள் சிதைக்கலாகுமா? அவ்வுருவத்தையும் சொல்லையும் உங்கட்கு கொடுத்த கடவுளுக்குத்தான் மகிழ்ச்சியாகுமா? நீங்களே சற்று நிதானமாக யோசியுங்கள். அன்பர்களே! நீங்கள் எப்பொழுதும் நல்லொழுக்கத்தையே கைப்பற்றி நடக்கவேண்டும். இளமையிற்கற்ற கல்வி நடைமுதலியவைகளே பிற்காலத்திற்பயன் கொடுக்க நிற்பவை. இளமையில் நெறிதவறிய ஒழுக்கத்தையுடையவராயின் பருவம்வந்தபொழுது ஒழுங்காக நடக்கவேண்டுமென்றாலும் 'பழக்கங்கொடியது பார் பாறையினைக்கோழிகிழிக்கும்' என்றபடி முடியாமற்போய்விடுமே. "**என்துடுக்கடக்கிப்பள்ளிக்குவைத்திலனே என் தந்தையாகிய பாதகனே**" என்று நீங்கள் உங்கள் தீயவொழுக்கத்தாலும் கல்வியின்மையாலும் பிறரால் ஒதுக்கப்பட்டு பிழைப்புக்கிடமின்றி நிற்கும்பொழுது உங்கள் தந்தைமாரையும் வெறுக்கநேருமே.

ஆதலால் நீங்கள் சிறுவயதில் நாம் யாருடன்சேர்ந்து நட்புப்பாரா ட்டுகின்றோம் ? நமது நடை எந்த முறையிற்செல்லுகின்றது ; என்று கவனித்தல் வேண்டும். உங்களுடைய மனநிலைமை இளமையில் மெழுகுபோல் மென்மைத்தன்மையாயிருக்கும். அம்மனதை எப்படிப்பட்ட உருவமாக்க வேண்டுமானாலும் ஆக்கலாம். வயது முதிர முதிர அம்மனம் கடினத்தன்மையையடைகின்றது. முதுமையில் கடினமான பின்னர் அம்மனதை நீங்கள் வேண்டியவாறு திருத்த அதனுடன் பாடுபடுவதெல்லாம் விழலுக்கிறைத்தநீராய் வீண்பாடாய் முடியுமல்லவா ?

நீங்கள் ஒருவரோடொருவர் உடன் பிறந்தார்போல் அன்பு பாராட்டி நேசித்துவரவேண்டும். நீங்கள் யாவரும் எல்லாம்வல்ல கடவுளுடைய புதல்வர்களே. தாய்தந்தையரைக்குறித்த இழிந்த சொற்களால் ஒருவரையொருவர் திட்டிக்கொள்வீர்களானால் உங்கள் தந்தையையே தூஷித்ததாக முடியுமல்லவா ? நீங்கள் மக்களாகப்பிறந்தும் சகோதரபாவங்காட்டாது விரோதிப்பீர்களானால் விலங்குபறவைகளைக்காட்டிலும் கடைப்பட்டவரென எண்ணப்பட மாட்டீர்களா ?

அன்பர்களே ! நீங்கள் வயதுவந்த பின்னர்யாவராலும் கொண்டாடத்தக்கவர்களாக உங்களையாக்கிக்கொள்வதற்கு இவ்விளம்பருவந்தான் ஏற்றது. களங்கமற்ற வெண்மையான ஆடையில்தான் வேண்டிய வண்ணங்களையேற்றலாம். உங்களுடைய மனமுதலிய காரணங்கள் மிகத்தூய்மையனவாக விளங்குகின்றன. அவற்றில் வாய்மை, கள்ளாமை, வெகுளாமை, இன்னுசெய்யாமை, கொல்லாமை முதலிய நற்குணங்களாகிய வண்ணங்களைத்தீட்டி அழகுபெறச்செய்ய வேண்டும். அவற்றுள் வாய்மை என்பது யாதெனில் உண்மையினது தன்மை. உண்மையாவது சிலர் நிகழ்ந்ததைச்சொல்வது உண்மையெனவும், நிகழாததைச்சொல்வது பொய்மையெனவுங் கூறுவர் அப்படியன்று. நிகழ்ந்ததாயிருப்பினும் நிகழாததாயிருப்பினும் பிறவுயிர்களுக்குத்தீங்கினைக்கொடுக்காத சொற்களாயிருப்பின் அவையே உண்மையெனப்படும். தன்னெஞ்சறிந்ததொன்றனைப் பிறரறியாரெனப்பொய் கூறலாகாது. கூறியபின்னர் அதனை உடனின்று அறிந்த தன்னெஞ்சே அதனால்வரும் பாவத்திற்குச்சான்றாகநின்று அதன் பயனாகிய துன்பத்தையடையச்செய்யும். ஒருவன் தன்உள்ளத்திற்

கேற்பப்பொய் கூறாது நடப்பானாயின் அவனை உயர்ந்தோர்கள் எப்பொழுதும் உள்ளத்தில் வைத்து எண்ணுவார்கள். ஒருவன் தன் மனத்தொடுபொருந்த உண்மையுரைப்பானாயின் அவன் தவமுந்தானமும் ஒருங்கே செய்வாரினுஞ்சிறப்புடையனாவன்; புறமாகிய மெய்யாற்செய்யப்படுந் தவந்தானமிரண்டினும் அகமாகியமனமொழிகளாற் செய்யப்படும் உண்மை உயர்வுடையதல்லவா? இம்மையிலடையவேண்டியபுகழுக்குக்காரணமாயிருப்பதும் வாய்மையே; மறுமைக்குவேண்டியஅறங்களை, பொருளீட்டல், உண்ணாதுநோற்றலாய துன்பங்களின்றிக்கொடுப்பதும் அதுவே. ஒருவன் பொய்யாமை என்னும் விரதத்தைச்செய்ய வல்லவனானால் அவன் பிறதருமங்களைச்செய்யாது விடுதலும் நன்றே. ஒருவர்க்குப்புறமாகிய உடம்பின்தூய்மை நீராலன்றி வேறொன்றாலாகாது. அதுபோல அகமாகியமனத்தூய்மை உண்மையினாலேயே யுண்டாகும். அறிவுடையவர்க்குப் புறத்திருள் நீக்கும் உலகவிளக்காகிய சூரியன் சந்திரன் தீயென்பன விளக்காகா; அறியாமையாகிய அகத்திருள்கடியும் வாய்மையாகிய விளக்கே சிறந்ததாகும். யானிதுவரையும் மெய்ந்நூலாகக்கண்ட நூல்களுள் எவ்வகையினும் உண்மையினுஞ்சிறந்த தருமங்களில்லை. இத்தகைய உண்மையாகிய சத்தியத்தைமேலாகப்பற்றியதாலல்லவோ அரிச்சந்திரனுடைய புகழ் இன்னும் இவ்வுலகத்தில் அழியாது விளங்குகின்றது.

என்கண்ணுக்கினிய சிறுவர்களே! பிறர் பொருளைக்கவர்தலாகிய களவினைக்கனவிலுங்கருதலாகாது. களவு செய்தலால் ஒருவன் பொருள் ஆவதுபோல முன்னர்க்காணப்படினும் அக்களவு தன்னளவுகடந்து முன்னுள்ளவற்றையும் அழித்துவிடும். களவினைவிரும்பியவர் எவ்வகை ஒழுக்கத்தையும் மேற்கொள்ளாதவராவர்.

மனமுவந்த இளைஞர்களே! எப்படிப்பட்டதுன்பத்தையுந்தரவல்லது கோபமாதலின் அதனை மறந்துங்கொள்ளலாகாது. ஒருவரது முகத்தின் நகையையும் அகத்தின் மகிழ்ச்சியையுங்கொன்று நிற்பது கோபமாதலின் அதனினும் வேறுபகையுண்டோ? ஒருவர் தம்மைத்தாம்காக்க வேண்டுமாயின் தம்மனதில் தோன்றுங்கோபத்தைக்காக்க; ஏனெனில் அக்கோபம் பின்தம்மையே கொன்றுவிடும். கௌசிகருடைய பெருந்தவமெல்லாங்கோபத்தாலழிந்ததை உலகமறியாதா?

மழலைமொழிமாறுத மாணவர்களே! எவ்வகைச் சிறப்புக்களைப் பெறுவதாயினும் நீங்கள் பிறர்க்குத் துன்பஞ்செய்பலாகாதென்னும் உறுதிப்பாட்டில்நில்லுங்கள். உங்கட்கு யாவரேனும் துன்பஞ்செய்வாராயினும் அவர் நாணும்படி அவர்க்கு இனிமையான நன்மைகளைச் செய்து ஒறுத்தலையும் துன்பஞ்செய்தலையும் விட்டொழிக.

ஒருவர் உயர்ந்தகுடியிற் பிறந்தவராயினும் உண்மை முதலிய நற்குணங்களுடன் பிறர்மதிக்கத்தக்க ஆண்மையில்லாதவராயின் உயர்ந்த கரும்பின்கண் தோன்றிய நறுமணமற்ற மலர்போல் பிறரால் நகைத்து இகழப்படுவர்.

நீங்கள் எந்தவேலையைச் செய்யினும் உண்மையுடனும் அன்புடனுஞ்செய்தல்வேண்டும். நீங்கள் செய்யும் ஒவ்வொரு வினையையும் விடாது பார்க்கவல்லவர் ஒருவருளர் என்பதை மறக்கலாகாது. ஒருவர் நிழல்விடாது தொடர்வதுபோல, எல்லாம் வல்ல இறைவாகிய கடவுள் உங்கட்குத் தோன்றாது உம்முடனிருந்தே கணந்தோறுஞ் செய்யும் தொழிலனைத்தையுங் கண்காணித்துவருகின்றனர். ஆதலால் ஒருவருமறியாதபடி ஓர்காரியத்தைச் செய்தோமென்று நினைப்பது மிகவும் பேதமை. எக்காரியத்தைச்செய்யினும் கடவுளுக்கு விருப்பமானமுறையிலேயே செய்ய முயலவேண்டும். கடவுள் அன்பாகிய வலையில் கட்டுப்படத்தக்கவர். அவர்க்குப் பணம்வேண்டா, வீடு வேண்டா. எல்லாம் உங்கள் நன்மையின்பொருட்டே அவரால் படைக்கப்பட்டன. அவருடைய ஆணையினாலேயே சூரிய சந்திர நக்ஷத்திரங்களும் தத்தம் வேலையை முறைபிறழாமற்செய்துவருகின்றன. மேகமுங் காலந்தவறாது மழைபெய்துவருகின்றது. குழந்தைகளைக் காத்தலில் தாய்தந்தையர்க்கு எவ்வளவு அன்பும் பொறுப்புமுண்டோ அவ்வளவு அருளும் பொறுப்பும உங்களைக்காத்தலில் அவர்க்குண்டு. மக்களுடைய கல்வி யறிவு நற்குண நற்செய்கைகட்குத் தாயுந் தந்தையும் மகிழ்வதுபோல உங்களுடைய சிறந்த வொழுக்கத்தையும் அன்பையுங் கண்டு அக்கடவுள் பெருமகிழ்ச்சியடைவர். தப்புதல்வனை அபாயத்தினின்றுங் காத்த ஒருவனிடத்தில் தந்தைக்கு எவ்வளவு மகிழ்ச்சியுண்டாகுமோ அதினும் பதின்மடங்கு மகிழ்ச்சி ஏனைய பிராணிகளைக் காக்கும் உங்கள்பால் அக்கடவுளுக்குண்டாகும். அவ்வாறின்றி மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில்வேறாயிருப்பின் உங்

கஃளப் பிறரும் நம்பார்; கடவுளும் விரும்பார். ஆதலால் உண்மை வழியினின்று கோபமுதலிய தீங்குணங்களில்லாமல் எவ்வுயிரையுந் தம்முயிர்போ லெண்ணி யாவருடனும் நண்புபாராட்டி நன்றிசெய்து கடவுளுக்கு நல்லவராதல்வேண்டும்.

இங்ஙனம் இளைஞர்களுக்கு நற்புத்திபுகட்டி அவர்கள்பால் அன்புபாராட்டி விடைபெற்றுக்கொண்டு நம்பசவேசர் தம்மிருப்பிடத்தை நோக்கிச்சென்றார். அவ்வழியே ஓர் உழவன் வயதுசென்ற கிழப்பசு வொன்றனை ஓட்டிக்கொண்டுசென்றான். அப்பசு விரைந்து நடக்காமையால் அவன் தன்கையிலிருந்த தாறுகோலால் அதனைக் குற்றி அடிமேலடி யடித்தான். அதனைக்கண்டார் நம் வள்ளலார், உடல் நடுக்குற்றார். மனக்கலக்கமுற்று விதிர்விதிர்ப்பெய்தினர். என்னதான் செய்வார்? அவ்வுழவனை வினவுகின்றார்.

அப்பா! ஏன் அந்தப்பசுவை அவ்வாறு அடித்தனை? அது என்னதான் குற்றஞ்செய்தது? அதுதன் காலமெல்லாம் உனக்காக வுழைத்து வயது முதிர்ந்தமையால் விரைந்துநடக்கமுடியாமலு மெள்ளெனச் செல்லுகின்றதே! அது இன்னமும் உனக்கு என்னதான் செய்யவேண்டும்? அதுவும் உன்னைப்போல் உயிருடையதுதானே. உன்னைப் பிறர் அடித்தால் உனக்கு நோவுண்டாகாதா? ‘இட்டார்க் கிட்டபலன்’ என்றபடி நீயும் வயதுமுதிர்ந்து கிழவனானபிறகு உனது புதல்வர்களும் உன்னை யிப்படித்தானே நையப் புடைப்பார்கள். அப்பொழுது என்னதான்செய்வாய்? உன்னைப்போலல்லவா இப்பசுவையுங் கருதலும் வேண்டும். என்று பரிவுடன்கேட்டார்.

அதற்கு அவ்வுழவன் ஐயா! சந்தைக்குச்சென்று காலத்தில் இதனை விற்றுப் பணத்தைப்பெற்றுக்கொண்டு வீட்டிற்குச்செல்ல வேண்டுமே என்ன, பசவேசர் இப்பசுவைவாங்குபவன்யார்? இதனால் என்னகாரியந்தான்செய்யமுடியும்? என்ன அவன், இதனால் ஒன்றுஞ்செய்யமுடியாது என்பதை யுணர்ந்து இதன் துன்பத்தையெல்லாம் ஒருங்கே ஒரு கணப்பொழுதில் ஒழிக்க வல்லவனிடந்தான்கொண்டு போகின்றேன் என்றான். உடனே நம்பசவேசர் அவன் கையிலிருந்த பசுவைக் கயிற்றுடன் பிடுங்கிக்கொண்டு தலைவன்பால் அழைத்துச்சென்று அவனைநோக்கி ஐயா! உம்மிடத்து நன்றிபாராட்டுங் குணம் சிறிதுமில்லையே! செய்ந்நன்றிகொன்றவரா யிருக்கின்றீர்!

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டே செய்ந்நன்றி கொன்றமகனுக்கு உய்வில்லையே! காலமெல்லாம் உமக்குழைத்துப் பால் முதலியவற்றைக் கொடுத்த பசுவைக் கொல்லவுந்துணிந்தீரே! பசுவினத்தாலன்றோ பயிர்த்தொழிலும் நடக்கின்றது. சங்கமேசராலயத்திற்குவழி படவர உம்மைக்கண்டேனே. அக்கடவுளுக்காட்டப் பால்முதலிய ஐந்தையுங் கொடுப்பது இப்பசுவன்றோ? எல்லாப் பிராணிகளும் கடவுளுக்கு உண்மையான ஆலயம் என்பதை யுணர்ந்தாயில்லையே! இப்பசுவின்கண் விளங்கும் கடவுளையறியாது மக்களாற் கட்டப்பட்ட ஆலயத்திற்குச்செல்வதால் பயன்யாது? இப்பசுவை நன்றியறிதலுடன் முடிவுபோகப் பாதுகாத்தாலல்லவோ இதன்கண் விளங்கும் கடவுள் உன்பால் கருணை செய்வர். என்று இவ்வாறு பரிவுடன் நல்லறிவு கொளுத்த அவ்வுழவித்துண்ணும் வேளாளர் அஞ்சி நடுங்கி அடிவணங்கி மன்னிப்புக்கேட்டுக்கொண்டு அப்பசுவைப் பராமரித்து வந்ததேயன்றி மற்றவர்க்கும் பசவேசரது அருண்மொழிவாக்கை உபதேசித்துவந்தார். (தொடரும்)

உ

வேலுமயிலுந் துணை.

கயிலைநாதன் அல்லமனைப் புகழ்தல்.

திருவாளர் உருத்திரசாமி ஐயர் அவர்கள் தமிழ்ப்பண்டிதர்
திருப்பாதிரிப்புலியூர்.

உலகத்தில் சரீரங் கொண்ட ஆன்மாக்களுக்கு உள்ள பல குணங்களுக்கு ஆதாரமானவையும், முதன்மையானவையுமான குணங்கள் மூன்றே. அவை சத்துவகுணம், இராசதகுணம், தாமதகுணம். உயிர்கள்மாட்டு அருளொடு இருத்தல், மெய்யே பேசுதல், தவத்துறைநிற்றல், இறைவன் ஒருவனே நந்தலைவன் என்னும் அறிவொடுஇருத்தல் பற்றற்றான்கண் பற்று வைத்து மற்றைய பற்றுக்களைவிடல், கற்றோர்க்கும் மற்றோர்க்கும் தாம் ஓர் எல்லையாக நன்னெறியில் ஒழுகுதல், அகமும் புறமும் தூய்மை உடைத்தாதல், ஆமைபோல் ஐம்புலனும் அடங்க இருத்தல் ஆகிய இவைகள் சத்துவகுணத்தின் செயல்களாம் தானதருமஞ் செய்ய விரும்புதல், தவத்தில் ஆசைகொள்ளல், பொய்யைக்கடிந்து மெய்பேசவேண்டுமென எண்ணம் வருதல், கல்வியின்

பயனை அறிதல், கேள்வியான் வரும் நன்மையைத்தெரிதல், ஞானம் ஒன்று உண்டு என நூற்களால் உணர்தல், புகழுக்கும் ஆசைபடல், சத்துவகுணத்தினரொடு சேரின் அக்குண முடையராதல் ஆகிய இவைகள் இராசத குணத்தின் செயல்களாம். கடவுள் ஒருவர்உண்டு என்னும் குணம் இல்லாமை, அருள் ஆதரவு இல்லாதிருத்தல், உணவில் மிக ஆசைகொள்ளல், பொய்பாராட்டல், மிகத்தூங்குதல், சதா சோம்புதல் காமப்பேய்பிடித்துத்திரிதல், அநீதியே ஆபரணமாக் கொள்ளல், லோபம் கோபம் குரோதம்பெருகுதல், பெரியோர்கட்கு அடங்காமை, குருநிந்தை சிவநிந்தை அடியார் நிந்தை வேதநிந்தை ஆகமநிந்தை சாத்திர நிந்தைகளைச் செய்தல், கண்டார் நடுங்குமாறு தீய ஒழுக்கத்தின்கண் நிற்றல் ஆகிய இவைகள் தமோகுணத்தின் செயல்களாம்.

சத்துவகுணத்தினர் ஒருவரே பிறவி துன்பமாயது என உணர்வர். உலக இன்பத்தில் மூழ்கார். இறைவனை யறிய ஆர்வங்கொள்வர். அதற்கெனத் திரிவர். இறைவனை எதிர்ப்படுவர். அருள் பெறுவர். பெற்றவழிநிற்பர். அவனோடு ஒற்றித்து இன்பம் அநுபவிப்பர். தமோகுணத்தினரோ இறைவனை எதிர்ப்பட்டவிடத்தும் உணராது அழியும் உலக இன்பமே இன்பமாக் கொண்டு உழன்று திரிவர். இராசத குணத்தினரோ, சத்துவ குணத்தினர் செய்கைகளையெல்லாம் கேள்வி அளவாக அறிந்து தம்மைச் சார்ந்த தமோகுணத்தினர்முன் அருள் பெற்றவராக நடித்து அவர்கள் அடையவேண்டும் எனஇடித்துக் கூறிஅவ்வருளைத்தாம் அடைய ஒருசிறிதும் முயற்சிசெய்யாது வாளாக்காலங் கழிப்பர். இவ்வுண்மையினை உலகந்தெளிய அறிவிக்கவே பிரபுதேவர் லீலை எழுந்தது. அச்சரித்திரம் வருமாறு :—

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்க உமாதேவியாரொடு எழுந்தருளியிருக்கும் முக்கியஸ்தானம் கயிலைமலையே. அது பிராகிருதம், அப்பிராகிருதம் என இருவகையினை யுடையது. அப்பிராகிருத கயிலைமலை எல்லா அண்டங்களும் கடந்த இடத்துள்ளது. எல்லாத் தத்துவங்களையும் தாண்டியது. நாதாந்தக்கரையில் இருப்பது. பிரம விஷ்ணு முதலிய தேவர்களாலும் காண்பரிது. ஞானக்கண்ணுடைய எவராலும் தரிசிக்கத்தக்கது. ஆங்காரமற்றவர் செல்லத்தகுந்தது. ஆசையில்லாதவராற்காணப்பெற்றது. பிராகிருத கயிலை நான்முகன் படைத்த அண்டங்களுள் இருப்பது. விண்ணுலகத்

து தேவாலயம்போல் விளங்குவது. உயர்வைக்கருதும் தேவர்கள் தொழும் இடம். தேவர்கள் ஊனவிழிகளால்காணுந் தகையது. மானுடர் இத்தூலவுடலுடன் செல்லவொண்ணாதது. சரியையாளர் சார்ந்து தங்கும் இடம். கிரியையாளர் சமீபித்து தரிசிக்கும் இடம். யோகிகள் சாரூபம் பெற்று மகிழும்இடம். பல வளப்பங்கள் நிறைந்துவெள்ளிமயமானது. அத்தகய கயிலையின் உச்சியில் பொன்மயமாய்ச்சுடர் விரிந்த ஓர் கட்டுமலை உள்ளது. அக்குன்றின்கண் நவரத்தினங்கள் இழைத்தலங்கரிக்கப்பெற்றஅத்தாணிமண்டபம் ஒன்று திகழ்ந்துளது.

அம்மண்டபத்தில் நடுவண் ஓர் சிம்மாசனத்தில் சூரியன் மண்டலத்துற்றதைப்போல், பெருமான் பணிபவர் குற்றங்களைந்துகுணமாக் கொள்ளும் குணமுடையவன் என்று சடையின்கண் இருக்கும் சந்திரன் விளக்க, எவரையும் அடக்கும் பேராற்றல் உடையவன் என்று முடிமீதுள்ள கங்கைபுகழ, மிகக்கருணை நிரம்பியவன் எனச் சந்திர சூரியர்களாகிய கண்கள் காட்ட, இவன் காமசகிதன் அல்லன் என நெற்றிக்கண் குறிக்க, அடியார்கள் செயும் எத்தகைய அன்புரைகளையும் அருளொடு கேட்கும் தகையாளன் என்று காதில்உள்ள தோடு உரைக்க, இவன் நான்கு வேதங்கட்கும் தலைவன் என்று மான் இடக்கையில் திகழ, சிவன் சர்வசம்ஹாரி என்று மழுவலக்கரத்தில் ஒளிர யாவரும் அழிய இவன் ஒருவனே அழியாதவன் என்று மார்பில் மதாணியாக விளங்கும் பன்றிக்கொம்பு உரைக்க, இயமபயம் நீங்கி அநுக்கிரகிக்கும் திருவடி இதுவே என்று வீரக்கழல் குஞ்சிதபாதத்தில் சப்திக்கச் **சிவபெருமானர்** வீற்றிருந்தார். அவரது பாங்கரில் பரமன் அணிந்த நறுமலர் கூந்தலின்மேல் திகழ, நெற்றியின் மிச்சைச்சுட்டி நலந்தர, கண்களில் கருணைபொங்க, முகத்தில்இளநகை தோன்ற, பொன்னூலைவள்ளைபோன்ற காதினை ஆபரணமாக் கொள்ள, என்றும் நிலைத்த மங்கல நாண் கழுத்தில் கவினைச்செய்ய, கவுணியற்குப்பால்சுரந்த கலசங்கள் இரண்டும் விளங்க, அவற்றின் புகழ் போல் முத்தாரங்கள் மேலே பொலிய, மலர் போன்ற கரங்களில் வளையல்கள் ஒலிக்க, முன்கரத்தில் உபனிடதம் உரைக்கும் கிளி தங்க, புலித்தோலுடையான் பெருஞ்செல்வத்தை எடுத்துப் புகழும் பட்டாடை சிற்றிடையில் சிறந்து விளங்க, மென்மை பொருந்திய அனிச்சமலர் மேலும் வன்மையுற்ற அம்மியின்மேலும்பட்டதுபோல்

அன்பர் மனத்திலும் அன்பிலா வன்பர் மனத்திலும் செல்லுந்தகை யனஎன்றுசிலம்புகள் திருவடிகளைப் புகழ்ந்தொலிக்கஉமாதேவியார் அருளொடு அமர்ந்திருந்தனர்.

ஆண்டு எம்பெருமாட்டிபால் அரம்பையர் எண்ணிலார் சூழ்ந் தனர். இந்திரைகள் எண்ணிலர் கவரி இரட்டினர். இந்திராணிகள் பல ஆலவட்டம் அசைத்தனர். கலைமடந்தையர் பலர் துதித்தனர். உருத்திரகணிகையர் பலர் நடித்தனர். உமையின் முக்குணங்களும் மூன்று மாதர்களாக அருகில்நின்றனர். அவர்களுள் தமோ குணமாகிய மாயை தருக்கிநின்றனள். கங்கையொடு கங்கையும் மதி யொடு மதியும் மானொடு மானும் உறவு கொள்ளப்பல உருத்திரக்கூட் டங்கள் நெருங்கின. சங்கம் ஒன்றுடன் ஒன்று தாக்க சக்கரம் ஒன் றுடன் ஒன்று பகைகொள பல விஷ்ணுக்கள் வந்து ஈண்டினர். கண் ணருவிபாய கரங்கள் சிரங்குவிய பல பிரமர்கள் சூழ்ந்து வணங்கினர். எவரும் தம்போல் பேறுபெற்றிலரெனக்கண்கள் ஆயிரத்துடன் பல இந்திரர்கள் அங்குச்சந்தித்து வந்தித்தனர். உரகர், சித்தர், கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர், சூரியர், சந்திரர்ஆதிகிரகங்கள், திக்குப்பால கர், நிருதர் மற்றையோர் தங்கள் விழிகள் பிதுங்கிடமருங்கில் நெருங் கினர். முனிவர்பலர் சூழ்ந்தனர். பூதங்கள் பல வந்தன. சிவ நிந் தை செய்வோரைத் தண்டிக்கும் வீரபத்திரர் வந்தனர். கபாலபாணி யனுகிய வடுகன் வந்தனன்.பெண்களுக்கும் வீரம்உண்டெனப்பல வீர மாதொடு வீரமாகாளியும் வந்தனள். ஞானம், வைராக்கியம் நல்லொ ழுக்கம் ஆகிய மூன்றினையும் முக்கால்களாக்கொண்ட பிருங்கியும் வந்து நடித்தனர். சந்நிதி விலக்கிக்கொண்டு நந்தி யெம்பெருமான் பிரம்பொடு திரிந்தனர். பாணன் முழவு அதிர்த்தனன். பானுகம் பன் சங்கம் முழக்கினன், அரனை உள்ளங்குளிரக் கண்டு ஆனந்த ங்கொண்டனர் சிலர். பரவசமாயினர் சிலர். கண்டம்விம்மநாத்தழுதழு க்கவழுத்தினர் சிலர். மெய்ம்மயிர் பொடிப்பநடித்தனர் சிலர். இறை வனைப் புகழ்ந்து மகிழ்ந்தவர் ஓர் சிலர் பரமனைத் துதித்துக் குதித் தனர் ஓர் சிலர். சிரிப்பவர் ஓர் சிலர். அவன் வார்த்தையை விரிப் பவர் ஓர் சிலர். அவன் நாமங்களைத் தரிப்பவர் ஓர் சிலர். இன்ன ணம் கயிலையில் மகாசபை கூடி விளங்கி இருந்தது. ஆண்டு நம் அன்னையாகிய இறைவி எழுந்து கயிலைநாதனைப் பணிந்து " இந்த மகாசபையின்கண் நெருக்கி நின்று ஏத்தும் நலன் உடைய பலரும்

கொடிய பிறவிக்கடலில் அலையாது இன்பநிலைபொருந்துவார்களா? அல்லது இன்பநிலைபெறுது துன்புறுவார்களா?" என்றுவினவினள். "பெண்ணே! நின்வினு நன்று. யான் மிக மகிழ்ந்தேன். ஓர் விருப்பம் அல்லது ஆசைதோன்றினுல் அவ்விருப்பத்தை முடிக்க ஓர் செயல் நிழும். அச்செயலைச் செய்ய ஒருவடிவு வேண்டும். வடிவு உறின் அதற்கேற்ப பெயர் வரும். இங்குள்ள பெருங்கடவுளர் எல்லாம் ஒவ்வோர் விருப்பம் உடையவர்களே. அவ்விருப்பத்திற்கேற்பச்செயல் செய்பவர்கள் அச்செயலுக்குத்தக்க ரூபம் கொள்பவர்கள் அந்தரூபத்திற்கு உரிய நாமம் பெறுபவர்கள். ஆகவே இவர்கள் நாமம் ரூபம் கிரியை உடையவர்களே ஆவர் ஆதலால் பிறவி பெறுவார்களே யன்றி இன்பநிலையினை அடையார்கள்" என்றனன் விமலன் "ஐயனே! இத்தகைய தேவர்கள் இன்பநிலை பெறுதற்குரிய உபாயம் ஒன்று மொழிந்தருளவேண்டும்" என்று விமலைகூற, இவர்கள் இருப்பது போகத்தை அனுபவித்தற்குரிய போகபூமி. இவர் பெற்றிருப்பது போகசரீரம் ஏகமாகிய இன்பநிலை போகபூமியில் போகதனுவினுல் பொருந்தமுடியாது. புண்ணியம் நிறைந்த கருமபூமியாகிய மண்ணுலகத்தில் சென்று சரியை கிரியைகளை இயற்றியோகநெறியில் நின்று குருவருளினுல் சிவஞானம் பெற்ருல் ஏகமாகிய இன்பநிலை பொருந்தும்" என்று உரைத்தனன் உமைகேள்வன். "அங்ஙனம் கருமபூமியில் உற்றவர்கட்கு உண்மையாகிய சிவஞானத்தினை உபதேசிக்க வல்லநல்லாசிரியன் எவன் உளன்? நவிலல் வேண்டும் ஐயனே!" எனஉமையாள் வேண்ட; "முன்னெருகாலத்தில் நிராங்காரன் சுஞ்ஞானிகள் என இருபெரியார் இருந்தனர். அவர் மிகத்தூயவர் தவம் இயற்றினவர் உலகம் நற்பேறு பெற விரும்பி இருந்தவர். அதற்கென ஓர் மகவுவிரும்பினர். நவதிங்கள் சமாதியில் அமர்ந்தனர். ஆன்ருேர்தவயோகங்கண்டு அவரது எண்ணத்தை முடிக்க **யாமே எமது உண்மை வடிவத்துடன்** குழவியாய் அவர்பால் அமர்ந்தனம். அல்லமன் என்னும் நாமம் பூண்டனம். அத்தகைய ஓர்ஆசிரியன் அன்பர்கட்கு அறிவுறுத்த பூமியின்கண் உலவுகின்றனன். அவன் சமயச் சழக்கை ஒழிக்க வல்லவன் முத்தொழிலும் இயற்ற வல்லவன். பிரமவிட்டுணுக்களாலும் அளவிடமுடியாதவன். **நினக்கும் மிக அரியன்** என்று விதந்து கூறினன் சிவபெருமான்.

"எனக்கும் அரியன் எனக்கூறியது என்னை உங்கள் அல்லமன் உண்மைநிலையினை இங்குக்குழுமிய தேவர்களும் எளிதில் உணர்வார்

களே" என்று மனங்கலங்கி உரைத்தனள்உமையாள். மாதே முனியா தே உன்றன் மொழியளவாக இருப்பவன்அல்லன் நம்அல்லமன். செயல் அற்றஅன்பர்பால் விரும்பிய வடிவத்துடன்அவர்கள் விழியிற்றோன்றிநின்றுஅருள்வன். அவ்வல்லமதேவனது இயல்புஎவராலும் சொல்லவொண்ணாதது. அத்தகைய பிரபுதேவரை இங்குள்ளவர்கள் எவர்கள்அறிவார்கள்? இவ்வார்த்தைஉண்மையாகும் எனக்கழறினன் காலகாலன். "எத்தகையோர்களும் யான் செய்யும் மாயாகாரியத்திற்கு உட்பட்டவர்களே ஆவர். அத்தகைய மாயச்செயலினின்றும் இவ்வல்லமன்தப்புவனேல் ஐயனே! தாங்கள் கூறுவது உண்மையாகும்இதனைப் பார்ப்பேன்" என்று உமைமாது கூறித்தருக்கிஇருந்தனள் "உன்றன் ஆற்றலை இப்போதே காண்போம். இன்னணம் சூள் உரைத்துச்சும்மாஇருந்தால் தோல்வி நின்னதேயாகும் இப்போஃத முயற்சிசெய்" என்று நிகழ்த்தினன் பரமன். என்னுரைதவறாது எனக்கூறி நம்அன்னையாகிய கௌரிஅங்குநின்ற தமோகுணவடிவமாகிய மாயையை விளித்து "நீ மண்ணுலகத்திற்குச்செல் அங்கு உலாவுகின்ற அல்லமநாம அண்ணலை அறிந்துவா" என்று பணியிட்டனள். மாயையும் அல்லமனை அடைவேன் அவன் இயல்பை அறிந்து அணைவேன் நமுவினால் வலிந்து பற்றி ஈர்த்து ஈண்டுக் கொணர்வேன் என்று உப்பங் கடலை முற்றும் உண்டிடுவன் என்று மொழியும் எறும்புபோலச் சபதங் கூறி அமலையைப் பணிந்து விடை பெற்றுக் கயிலை நீங்கினள்.

தொடரும்.

உ

சிவநிர்மாலியஸ்வீகாரம்.

(ஆஸ்தானவித்துவான் சிரசி குருசாந்த சாஸ்திரிகள்)

ஏலிங்கதாரிணோலோகே ஏசிவைகபராயணா:
தேஷாந்து சிவநிர்மால்யமுசிதம் நாங்யஜந்துஷு
பத்ரம் புஷ்பம் பலந்தோயம் அந்நபாநாத்யமௌஷதம்
லிங்கார்ப்பிதம் விநாபும்க்தே ஸத்யோ பவதிகில்விஷி.

சிவலிங்கதாரிகள் என்ற வீரசைவர்கள் எப்பொழுதும் சிவநிர்மாலியத்தை உபயோகிக்கவேண்டுமேயன்றி இதரதேவதைகளின் நிர்மாலியத்தை பயோகிக்கக்கூடாதென்றும், பத்திரம் புஷ்பம் பழம் அன்னம்

நீர் மருந்து முதயவற்றுள் யாதொன்றை உபயோகிக்கவேண்டுமாயினும் தன்னுடைய பரமோபாஸ்யமாகிய இஷ்டலிங்கத்திற்குச்சமர்ப்பித்தே அநுபவிக்கவேண்டுமென்றும், அவ்வாறின்றிச்சிவலிங்கத்தை மறந்து தானேயுபயோகித்தால் அவன் மகாபாபி ஆவானென்றும், காந்தமுதலியபுராணங்கள் உறுதியாகக்கூறுகின்றன. இலிங்காங்கியாகியமனிதனுடைய பஞ்சபூகபௌதிகசம்பந்தமான தூலவுடம்பும் இளமைமுதற்கொண்டே சிவநிர்மாலியத்தால் வளரவேண்டுமேயன்றி இதர லௌகிகமான அன்னமுதலியவற்ருல் வளரலாகாது. வீரசைவ சித்தாந்தப்படி பொருள்களில் பதார்த்தம் என்றும் பிரசாதம் என்றும் (நிர்மாலியம்) இரண்டுவிதமுண்டு. சிவபெருமானுக்குக்கொடுத்து மீந்திருக்கின்ற பத்திரபுஷ்பம் பழம் பணிகாரம் அன்னபானீயம் எல்லாவற்றிற்கும் பிரசாதம் (நிர்மாலியம்) என்று பெயர். சிவலிங்கத்திற்குக்கொடுக்காமல்மீந்திருக்கும் பொருள்களுக்கே பதார்த்தம் (அநிர்மலியம்) என்றுபெயர். வீரசைவன் இலிங்கபோகோபபோகியாக (இலிங்கத்திற்கூட்டத்துணைவனாக இருந்துண்பவனாய்) இருத்தலினால் இவனுடைய இரத்த மாமிசாதிகளெல்லாம் வைதிகமாகிய சிவநிர்மாலியத்தால் வளரவேண்டுமேயன்றி லௌகிகமாகிய பதார்த்தத்தினுல் வளரலாகாது. சிவநிர்மாலியத்தை உண்ணாதவன்எவ்வகையினும் வீரசைவனென்று கருதப்படான். சிவநிர்மாலியத்தில் பக்தியில்லாதவனுகி உயர்வையடையும்பொருட்டுத்தானும் வீரசைவனென்று சொல்லிக்கொள்வானுயின் அப்பெயர் பயனற்றதாகுமேயன்றி பயனைத்தரும் காரணப்பெயராகாது. அதனுல் ஏனைய எந்தக் கிரியைகளில் சிறிது குறைவுண்டாயினும் சஞ்சீவிக்குச்சமானமான சிவநிர்மாலியஸ்வீகாரத்தினுல் தேவதேவோத்தமனுன சிவபெருமான் மகிழ்ச்சியுடையனுகி இவனுக்கு நிகில சுகபோக சம்பத்துக்களைக் கொடுப்பனென்றும், மற்றும் சிவநிர்மாலியத்தினுலேயே ஆதிசேடன் பூபாரத்தைத் தாங்கும் திறமையடைந்திருக்கின்ருனென்றும், பிரமன் இந்திரன் முதலியவர்களும் இந்த சிவநிர்மாலிய ஸ்வீகாரத்தினுலேயே தத்தம் ஆதிபத்தியத்தை வகித்திருக்கிருர்களென்றும் ஆகம புராணங்கள் சிவநிர்மாலிய மகத்துவத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றன வன்றியும், "ருத்ரேணுத் தமஸ்நந்தி ருத்ரேணபீதம் பிபந்தி, ருத்ரேணுக்ராதம் ஜிக்ரந்தி தஸ்மாத் ப்ராஹ்மணேணுப்ரசாந்தமநோ வித்வான் நிர்மால்யமேவ பக்ஷயேத்" என்று ஜாபாலோபநிஷத்தும் சிவநிர்மாலியத்தின் உயர்வைப்பற்றிக் கூறுகின்றது.

இத்தகைய தூய்மையான சிவநிர்மாலிய விஷயத்தில் இப்பொழுது பலர் விபரீத பாவனைகளைச் செய்து நாஸ்திகமார்க்கத்தைப் பற்றியிருக்கின்றார்களே! வேள்வியில் உபயோகிக்கும் அவிர்ப்பாகத்தினால் தேவர்களும், சிராத்தத்தில் கொடுக்கும் பிண்டப்பிரதானத்தால் பிதுர்தேவதைகளும், சிவநிர்மாலிய ஸ்வீகாரத்தினால் பரமசிவனும் மகிழ்ச்சியடைந்தவராகி அவரவர் விரும்பிய பொருள்களைக் கொடுப்பார்களென்று யாராவது போதிப்பாராயின் அதன்கண்கௌரவபுத்தி தோன்றுவதுங்கூட அரிதாகின்றது. தேவன் வேறுலோகத்தின்கண் இருக்கின்றான்; இவ்வுலகத்தில் நானிருக்கின்றேன், இங்கு தேவனுக்குக் கொடுக்கும் பாகங்கள் அவ்வுலகத்திற்குப் போவது என்பது பொருந்தாதது. இவையெல்லாம் தள்ளத்தக்கவையென்று ஆப்த (சாஸ்திர) வாக்கியத்தைக் கண்டித்துப் பிரத்தியக்ஷப்பிரமாணமொன்றையே ஏற்றுக்கொள்ளுவதை நோக்கினால் இப்படிப்பட்டவரைச் சார்வாகமதத்தினர் என்று கூறவேண்டியதாகின்றது. கண்ணாற் காணுவதொன்றி மாத்திரம் பிரமன்ணபுத்தியை வைத்தும், சத்தம் அனுமான முதலிய பிரமாணங்களில் அறியைச் செலுத்தாதும், குரு தேவரிடத்தில் நம்பிக்கையின்றியும் இருக்கும் அப்படிப்பட்டவரை ஆகாரம் நித்திரை முதலியவற்றில் மாத்திரம் விருப்பமுள்ள விலங்குகளுக்குச் சமானமானவரென்று சொல்லுவதேயன்றி பிரபஞ்ச போக யோக்கிய விசாரமே அவருக்கில்லையென்று சொல்ல வேண்டியதாகின்றது. ஆப்த (சாஸ்திர) வாக்கியத்தில் யாருக்குச் சிரத்தையுண்டோ அவருக்கே தெய்வபக்தியுண்டு. குருபக்தியுண்டு. தாய்தந்தையரிடத்து பக்தியுண்டு. விதிவிலக்கறிவும் உண்டு. இப்படிப்பட்டவரிடத்தே சர்வவியாபகனாகிய சிவபெருமானுக்கும் விருப்பமுண்டாகின்றது. ஆதலினால் வீரசைவனுடைய அபிவிருத்திக்கே சாதகமாகிய சிவநிர்மாலியத்தை ஒவ்வொரு லிங்கரங்கியும் தவிராது கொள்ளுதல் வேண்டும்.

உலகத்தில் பௌதிக சக்தியென்றும் தைவிகசக்தியென்றும் இரண்டுவிதமான சக்திகளுண்டு. பௌதிகசக்தி மனிதனுடைய இந்திரிய அறிவின் திறமையினாலுண்டாவது. ஆகாயவிமானம், ரையில் கிராமபோன், டெலிகிராப் முதலியவைகளெல்லாம் இந்த பௌதிக சக்தியினாலேயே உண்டாகின்றன. இது காட்சிப்பொருட் பயனையே கொடுக்கும். தைவிக சக்தியென்பதோ தான்செய்யும் தூய்மையான கிரியாவொழுக்கம் ஞானவொழுக்கங்களினால் ஆத்மா தூய்மையடை

ந்து கடவுளுடைய நேர்முகத்தை யடைகின்றது. இந்த தைவிகசக்தி யானது கண்ணுக்குப் புலனாகாத பயனை யுண்டாக்குகின்றது. இந்த தைவிக சக்தியினால் எவ்வகைப் பதார்த்தங்களின் சம்பந்தமில்லாம லேயே கடவுளே விரும்பிய பொருளைக் கொடுப்பர். வேள்வியினால் தேவர்கட்கு அவிர்ப்பாகம் கொடுக்கப்படுகிறது. சிராத்தத்தினால் பிதுர்தேவதைகளை மகிழச்செய்வது. சிவனுடைய நிர்மாலியத்தை யேற்றுக்கொள்ளுதல் முதலிய கிரியைகளினால் ஒரு தைவிகமான சக்தி நிலைபெறுகின்றது. இந்த சக்தி அபூர்வ ரூபமாகிய அதிர்ஷ்ட பலத்தை (முன்னரில்லாத வடிவமாகிய கட்புலனாகாத பயனை) தவி ராது கொடுக்கின்றது. கடவுள் சம்பந்தமான கிரியைகளெல்லாம் கட்புலனாகாத பயனுக்கே சாதகங்களாகின்றன. வைதிக மதத்தைப் பற்றிய மனிதன் கட்புலனாகும் பயனைப்போலவே கட்புலனாகாத பய னிலும் கருத்துள்ளவனாக இருக்கவேண்டும். பயன் கண்ணுக்குப் புலனாகாதிருக்கின்ற காரணத்தினாலேயே தைவிக சக்தியே பொய்யெ ன்று சொல்வது அடாது. யாதாவதொரு காய்ச்சிய இரும்பினிடத்து தீ காணப்படாமலிருப்பினும் அதன்கண் தீயில்லையென்று கூறுவது கூடுமோ ? அப்படித் தீயில்லையென்று கூறுபவனுக்கு அந்த இரும் பைச் சிறிது தொடும்படியாகச் செய்தால் தீயுண்மை அவனுக்குப் புலனாகும். ஆதலினால் கண்ணுக்குத் தோன்றுவதையே நம்பவேண் டுமென்று கூறுவது அடாது இதனால் கண்ணுக்குப் புலனாகும் ஆகாமலிருக்கும் பயன்களிரண்டிலும் கருத்துடையவனாக இருத்தல் வேண்டும். தன்கண்ணாற் காணாமலிருப்பினும் ஒரு நண்பன் இந்தவ ழியில் திருடர்பயம் உண்டென்று கூறினால் அந்தமொழியைநம்புதலே வேண்டும். அப்படி நம்பாமல் கண்ணாற் கண்டதையே நம்புவேனெ ன்று முன்னாற்பிரயாணஞ் செய்வானாயின் அவன் அதன்பலனை அனு பவித்தே தீரவேண்டும். அனுபவித்த பின்னர் அந்த நண்பனுடைய மொழியைச் சிந்திப்பதனால் யாது பயன் ? இங்கு வேதாகம வாக்கிய ங்களே ஆப்த வாக்கியங்களாகின்றன. இந்த ஆப்த வாக்கியங்களைப் பரிபாலிப்பாராயின் ஆப்த வாக்கியங்களைச் செய்த பரமசிவன் வேண் டிய பலன்களைக் கொடுப்பன். கட்புலனாகும் பயனில் எப்படி நம்பிக் கையுண்டோ அப்படிப்பட்ட நம்பிக்கை கட்புலனாகாத பயனிலும் இருப்பதே பாரதர்களாகிய நம்மவரது சிறந்த தர்மமாயிருக்கின்றது. ஆதலினால் ஒவ்வொரு வீரசைவ ஆண் பெண் பாலர்களும் வேதாகம புராணாதிகளின் பிரமாணங்களுக் கிணங்க மதத்தாபகராகிய ஸ்ரீ பஞ்

சாசாரியர்களால் சித்தாந்தஞ் செய்யப்பெற்ற சிவநிர்மாலீய ஸ்வீகாரம் என்னும் நித்தியவிதியை அனுஷ்டித்துப போகமோக்ஷங்களேயடைந்து சிவபெருமானுடைய கருணைக்குப் பாத்திரராக வேண்டுமென வேண்டுகின்றோம். (தொடரும்.)

ஸ்ரீ பஞ்சாசாரியர் திருவடிவாழ்க.

இலிங்கதாரண வைதீகத்துவம்.

வீரமாகேச S. M. ஆறுமுகாரியர் அவர்கள் பிரசாரகர்.

யத்ஸம்வீக்ஷண மாத்ரஜர்ய ரிதபக்தாநேக புரியஷ்டகம்,
த்வைதாத்வைத விசிஷ்ட பௌத்த மமத்தேபேந்திர கண்டீரவம்,
சைவாத்வைத விவேகசார விலஸத்ஸித்தாந்த பக்ஷப்ரதம்,
சம்போதவச்சரணம் பவாத்பிதரணம் மநீயே ஜகத்போஷணம்.

பெரியோர்களே !

வேத சம்மதமுடைய தெதுவோ அது வைதீகத்துவம் எனப்படும். வைதீக மதங்களில் த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் சத்திவிசிஷ்டாத்வைதம் என்பன நான்கும் பிரசாரத்திலும் அனுட்டானத்திலும் இருந்து வருகின்றன. நீங்கின சௌரகாபாலிகாதி பல மதங்கள் வைதீகமானலும் அந்தந்த மதத்தை யாதரிப்போர் தொகை குறைய பெயர் மாத்திரம் எஞ்சி நிற்கின்றது. வீரசைவசமயம் என்பது த்வைதாதி மதங்களுள் சத்திவிசிஷ்டாத்வைத மதமேயென, இவர்களது அனுட்டான முறையினலும், வம்சக்கிரமத்தாலும், குருபரம்பரையினலும், சித்தாந்த சாஸ்திரங்களின் கருத்தாலும் அறியக்கிடக்கின்றது.

த்வைதமதத்தை ஸ்ரீ மத்துவாசாரியரும், அத்வைத மதத்தை ஸ்ரீ சங்கராசாரியரும், சத்திவிசிஷ்டாத்வைத மதத்தை ஸ்ரீ ரேணுகாதி பஞ்சாசாரியர்களும் தாபனஞ் செய்திருக்கின்றார்கள். வீரசைவமதாசாரியர்களாகிய ஸ்ரீ ரேணுகாசாரியர், தாருகாசாரியர், ஏகோராமாசாரியர், பண்டிதாசாரியர், விஸ்வாசாரியர் என்ற ஆசாரியசீலரைவரும் சத்திவிசிஷ்டாத்வைத மதத்தைத் தாபித்து, அரம்பாபுரி, உஜ்ஜயினி, கேதாரம், ஸ்ரீசைலம், வாரணாசி என்னும் ஐந்திடங்களில் சிம்மாசனரூடராக யெழுந்தருளினர்கள். அந்தப் பிரசித்த க்ஷேத்திரங்களும், ஆங்குள்ள வீரசைவ பீடங்களும் இப்பொழுதும் விளங்குகின்றன.

ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர், ஸ்ரீபதிபண்டிதர் என்னும் ஆசாரியரிருவரும் ஸ்ரீ பஞ்சாசாரியர்களால் செய்யப்பெற்ற வேதாகம முடிபாகிய சித்தாந்தக் கருத்தின்படி பிரமசூத்திரபாஷியம், உபநிடதபாஷியம், கீதாபாஷியம் என்பனவற்றை விரிவாக எழுதியும் த்வைதம் அத்வைதம் முதலிய பலமதங்களை யுக்தியினாலுங்கண்டித்தும் சத்திவிசிஷ்டாத்வைதமென்னும் வீரசைவ மதத்தைச் சித்தாந்தப்படுத்தியுள்ளார். இவ்விருவரது பாஷியங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

இங்ஙனம் வீரசைவமதமானது பலமதங்களுள் தலைசிறந்து விளங்குவதாயிருப்ப, சிலசமயவாதிகள் அஷ்டாவரண சம்பன்னமாதிப் பிரமாணங்கள் சுயசித்தாந்தக் கிரந்தங்களில் காணப்படுவதால் அதன்படி அட்டாவரணங்கள் வீரசைவர்களுக்குப் பிரதிதினமும் அனுட்டானத்தி லிருக்கவேண்டுவ தவசியம் என்றும், அட்டாவரணங்களுள் ஒன்றான சிவலிங்கம் வேதசம்மத முடையதாயினும் தாரணம் வேதசம்மதமாகுமா என்றும், தாரணம் வேதசம்மதமாகாதபோது சிவலிங்கதாரணத்தை முக்கியமாகக் கொண்டுள்ள வீரசைவம் எவ்வாறு வைதீகமாகும் என்றும், அகமுக இலிங்கதாரணமே விசேடமாயிருக்கப் புறமுக இலிங்கதாரணம் எதற்கென்றும் இன்னோரன்ன வினாக்களை யெழுப்பி வாதிக்கின்றனர். இவர்க் கறிவிக்கு முறையில் சுருதி ஸ்மிருதி உபநிஷத்து ஆகம புராணேதிகாசப் பிரமாணமாயும், பூருவாசாரியர்களின் கருத்தின்படியும் உண்மையை விளக்க வேண்டியது நமது முதற்கடமையாகின்றது.

யஜுர் வேதத்தில் நாராயண அநுவாகத்தில் " தகரம் விபாபம் " என்பதாதியாகக் கொண்டு சூசிக்கப்பட்ட பாவலிங்க ரூபமான பரப்ரம்ம அந்தர்த்தாரணத்தை, "நமோப்ரஹ்மணே தாரணம் அஸ்து ஊர்த்துவாய நம: ஊர்த்துவ லிங்காய நம:" என்பனவாதிய வாக்கியங்களிலிருந்து சிவலிங்கம் எல்லா ஆத்மாவிலும் இருக்குந் தன்மையைக் காட்டி, "ஸர்வலிங்கம் ஸ்தாபய திபாணிமந்த்ரம் பவித்ரம்" என்னும் வாக்கியத்தினாலே பாஹ்யலிங்கதாரணம் (புறத்தில் இலிங்கதாரணம்) கூறப்பெற்றிருக்கின்றது. " நிதனபதயே நம :" முதற்கொண்டு " ஏதத்ஸோமஸ்ய ஸுர்யஸ்ய " என்பது வரையில் பிரயோசனமுள்ளவாதமென்னப்படுகின்றது. " ஸோமஸ்ய சூர்யஸ்ய " என்பதில் சமமான அர்த்தத்தை விவரிக்கும்படியான ஜ-காரம் இல்லாததனாலும் சுமஸ்காரம் என்னும் அர்த்தத்தை விவரிக்கும் நான்காம் வேற்றுமை

யல்லாததாலும், உபக்கிரம உபசம்மாரங்களில் பரமசிவனுடைய விஷயமிருப்பதால் சூரிய சந்திரர் என்னும் பொருள் கூறுவது சரியல்லவென்றும், ஸூர்யஸ்ய - சூரியமண்டலத்துள் பிரகாசிக்கின்ற ஸோமஸ்ய - பார்வதி சமேதனான சிவனுடைய இலிங்கம் பரமசிவனுக்கேயிஷ்டமாகியும், பஞ்சசூத்திர கடிதமாகியும், சத்குருவினுடையகருணையாலடையப் பெற்றதாயுமிருக்கின்ற இலிங்கத்தை யாவரும் அணிந்துகொள்கின்றனர் என்னும் அர்த்தத்தை 'ஸர்வலிங்கம் ஸ்தாபயதி' என்ற வாக்கியத்தா லறிவித்து, இலிங்க ஸ்தாபனத்திற்கு ஆதாரம் யாது? எனக்கேள்வி பிறந்தவிடத்து 'பாணிமந்திரம் பவித்திரம்' என்னும் அடைமொழியினுல் கைமுதலிய தானங்களில் தாரணம்விதிக்கப்பெற்றுள்ளது. பாணி மந்திரம் என்பதுபோல் பாணௌ - கையில், மன்னுத் - பூசைசெய்வதனுலே, த்யாயதே - ரக்ஷிக்கிறது என்னுங்காரணத்தினுல் இலிங்கத்திற்குப் பாணிமந்திரம் என்னும் அடைமொழியானது, சௌசம் ஆசமனம் இல்லாத அபரிசுத்தமான காலத்தும் தரிக்கத்தகுந்தது. ஆனதால் பவித்திரம் என்னும் அடைமொழியோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மந்திரத்தின் பொருளை வியாசர் இலிங்கபுராணத்தில் அழகாக அமைத்துள்ளார்.

(இலிங்கபுராணம்.)

"வேதேஷு சாஸ்த்ர ஸங்கேஷு புராணேஷ்வாகமேஷுச, ப்ராம்ணஸ்யஸமாக்யாதம் லிங்கதாரண முத்தமம்; யஜுரப்யாஹ ஸர்வம்வைலிங்கம் ஸ்பயதீதிச, தஸ்மாத்தார்யம் மகாலிங்கம் பாணிமந்த்ரத; பாளௌலிங்கம் விநிக்ஷிப்ய பூஜாகாலே குருஸ்வயம், எனஸ்துவதி தந்மந்த்ரம் பாணிமந்த்ரம் வதந்திஹி; பவித்ரத்வாத் மஹேசஸ்ய சிவஸ்ய ப்ரதிபாதநாத், பவித்ர காணத்பும்ஸாம் பவித்ரமிதிகத்யதே; தஸ்மாத் ஸர்வேஷுகாலே ஷுதாரயே லிங்கமுத்தமம், கச்சம்ஸ்திஷ்டங்ஸ்பங் ஜாக்ரதுன்மிஷன் நிமிஷன்நபி; சுஜிர்வாப்ய சுஜிர்வாபிலிங்கம் மனோஹரம், அர்ஜஹித்கந்தபுஷ்பாத்யை: கரபீடேஸமாஹித: நித்யாநிகர்மப்ருந்தானி ததாநைமித்திகாநிச; சிவார்ப்பண தியாகுர்யாத்யாத்ஸம்யக் ஜ்நாபிவ்ருத்தயே."

இதன்பொருள், வேதசாஸ்திர புராண ஆகமங்களில் பிராமணனவனுக்கு இலிங்கதாரணம் உத்தமம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யஜுர் வேதத்தில் ஸர்வ லிங்கம் ஸ்தாபயதி என்றுசொல்ல

ப்படுகிறது ஆதலினால் சிவலிங்கத்தைப் பாணிமந்திரம் பவித்திரம், என்னும் மந்திரத்தால் தாரணஞ் செய்யவேண்டியது. ஆசாரியர் பூஜாகாலத்தில் சிவலிங்கத்தைக் கையில் வைத்து எந்த மந்திரத்தால் துதிக்கின்றாரோ அந்த மந்திரம் பாணிமந்திரமென்று அறிஞர் கூறுகின்றனர். இலிங்கமானது பரிசுத்தமாயிருப்பதாலும், எல்லாவற்றிற்கும் ரக்ஷகனான சிவனை அறியப்படுத்துவதனாலும் தூய்மையுடைத்தெனக் கூறப்படுகின்றது. ஆதலினால் எல்லாக் காரியங்களிலும் சிவலிங்கத்தைத் தரிக்கவேண்டியது. நடக்கும்போதும், நிற்கும்போதும், உறங்கும்போதும், விழிக்கும்போதும், இமைக்கும்போதும், சுத்தமாயிருக்கும்போதும், அசுத்தமாயிருக்கும்போதும், எப்போதும் சிவலிங்கத்தை விடாது தரிக்கவேண்டும். தாவரலிங்கத்தைப் பூசிப்பவன் பூசிக்குங் காலத்தில் மாத்திரம் மடியாயிருக்கின்றான். இலிங்கதாரணமுள்ளவன் எப்பொழுதும் மடியாயிருந்து தன்னுடைய இஷ்டலிங்கத்தைக் கரபீடத்தில் வைத்து நிலையான மனதுடன் முக்காலங்களிலும் கந்தபுஷ்பாதிகளால் பூசிக்கவேண்டும். சிவஞான விருத்திக்காக நித்திய நைமித்திக கர்மங்களைச் சிவபிரானுக்கே அர்ப்பணஞ் செய்யவேண்டும்.

வாதுளாகமம்,

" தாரயேத்யஸ்து ஹஸ்தாதௌ லிங்காகாரம் சிவம்ஸதா, தஸ்யஹஸ்தஸ்திதம் வித்திமத்பதம் ஸம்பதாம்பதம் " எவனொருவன் கைமுதலிய அங்கங்களொன்றில் இலிங்கரூபமான சிவனைத் தாரணஞ் செய்துகொண்டானோ அவனுடைய கையில் சகல ஐஸ்வரியங்களுக்கும் தாயகமான என்னுடைய பதவியிருக்கிறது என்று அறிந்துகொள், எனச் சிவபெருமான் பார்வதி தேவிக்கு நிரூபணஞ்செய்திருக்கிறார். " ஸர்வானன சிரோக்ரீவஸ்ஸர்வபோத குஹாசய :- ஸர்வவ்யாபிசபகவரன் தஸ்மாத்ஸர்வகதச்சிவ : " லிங்கமத்யே ஜகத்ஸர்வம் தத்ப்ராணேஷ்வந்தர் மனஸோ லிங்கமாஹு : ஜ்யோதிர்லிங்கம் ப்ரூர்மத்யே நித்யம் த்யாத்யாயேத் ஸதாகதி :, லிங்கம்ப்ரஹ்மைவகேவலம் லிங்கம் பிரஹ்மஸநாதனம், தகரம் விபாப்மம் ... ... தநுபாவஸிதவ்பம், யோவேதாதௌ ... ... ய : பரஸ்ஸமஹேஸ்வர :. லிங்கே ஸுஷுப்தி : " இவை முதலான அதர்வணருத்ர ஹம்ஸகடவல்யாதி உபநிஷத்துகளில் இலிங்கமென்ற சப்தத்திற்குபரமசிவனிடத்திலேயே சக்தியிருப்பதனால் இலிங்கமென்னும் பரமசிவனை உள்ளும்புறம்பு

மாகிய இரண்டினும் தாரணஞ்செய்துக் கொள்வதே தாரணமென்று பொருளாகிறது. மற்றும் இலிங்கதாரண மென்னும் கர்மமானது கேவல வைதீகமென்று பூர்வபக்ஷ சமாதானங்களுடன் சித்தாந்தஞ் செய்த ஆசாரியர்களால் நிலைநாட்டப் பெற்றிருப்பதால் வீரசைவமதத்தை அவலம்பிக்கிறவர்களும், மோக்ஷ விருப்பமுடையவர்களும் இலிங்கதாரண மென்பது அநாதியாக ஏற்பட்ட வைதீக கர்மமென்று அறியத்தக்கது. (தொடரும்)

உ

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாச சுவாமிகளும் அவர்நூல்களும்.

சோணசைலமாலை.

பக்கத்தொடர்ச்சி.

இனி, இறைவன் பரவையார் பாற்றூது சென்ற வாலாறு 22 ஆம் செய்யுளாற் கூறுகின்றனர். அவ்வரலாறு :—

திருவொற்றியூரினின்றும் போந்து திருவாரூரையடைந்து, தம்குறையெல்லாமொழிந்து, தம்திருகண்ணிலும், அம்பொற்புற்றினிடையெழுந்த செழுந்தண்பவளச் சிவக்கொழுந்தினருளைப்பருகித் திளைத்துத்தேவாசிரியன் மருங்கு அணைந்த **வன்றொண்டப்பெருந்தகையார்**, தம்வருகையைப் பரவையாருக்குணர்த்திவாத் தமது **பரிசனங்களை** யனுப்பினர்.

அப்பொழுது, வன்றொண்டப்பெருத்தகையாம் நாயனாது பிரிவாற்றாது, அவர் திருவொற்றியூரிலிருப்பதறிந்து அவரைஅழைத்துவரற்பொருட்டு சிலரை யனுப்பி, அவர்களால், “ செம்மைநெறிசேர் திருநாவலூரர் ஒற்றியூர் சேர்ந்து, கொம்மைமுலையார் சங்கிலியார் தம்மைக்குலவும் மணம்புணர்ந்த, மெய்மைவார்த்தையைக் கேட்டுத் தம்மையறியாவெகுளியினால் தரியாத நெஞ்சினொடும் தளர்வாராய். ”

மென்பூஞ்சயனத்திடைத்துயிலும் மேவார் ; விழித்தும் இனிது அமரார் ; பொன்பூந்தவிசின்மிசையினிரார் ; நில்லார் ; செல்வார் ; புறம்பொழியார் ; மன்பூவாளிமழைகழியார் ; மறவார் ; நினை

யார் ; என்செய்வார் ; என்பூடுருக்கும் புலவியோ, பிரிவோ, இரண்டினிடைப்பட்டார். ஆகியிருக்கும் பரவைநாச்சியார், பண்டு போல்வந்த அப்பரிசனங்களைப் புறங்கடையிற்றானும் நிற்கவொட்டாது அகற்ற அவர்கள் அதனை நாயனாருக்கு அறிக்கையட்டனர்.

அதனை யறிந்த நாயனார், "உற்றஇதனுக்கு இனியென்னோ செயலென்று உலகியல்புகற்றமாந்தர் சிலர்தம்மைக்காதற்பரவையார்கொண்ட செற்றம் நிலைமையறிந்து அதற்குத்தீர்வு சொல்லச் செலவிடச்சென்ற அவர்களும், எம்பிராட்டிக்குஇதுதகுமோஎன்றுபலவும் எடுத்துரைக்கப் பரவையாரும், ஏதம்மருவும் அவர்திறத்தில் இந்தமாற்றம் இயம்பில் உயிர் போதலொழியாது எனவுரைக்க, அவர்களும் திருப்பிவந்து புகுந்தபடிஎல்லாம் விளம்பிப் போயினர்.

நாயனார் "பின்னையில்லைசெயல்" என்று பெருமானடிகள் தமைநினைந்தனராகப், புற்றிடங்கொண்ட புனிதரும், அவர்முன் தோன்றியருளி, என் நீ யுற்றது எனவினவியருள, அவரும் "அடியேன் அங்குத்திருவொற்றியூரில் நீரே அருள்செயச்சங்கிலியை அணைந்ததிறம் எல்லாம், பரவைதான் அறிந்து தன்பால்யான் குறுகின் முடிவேனென்று துணிந்து இருந்தாள் என்நான்செய்வது? நான் உமக்கு, இங்கு அடியேனாகில், நீர்எனக்குத் தோழரும் ஆம்தம்பிரானருமே ஆகில், அறிவும் இழந்து அழிவேனது அயர்வுநோக்கி, அவள்வீடுவரைக்கும் சென்று இவ்விரவே பரவையுறு புலவிதீர்த்துத் தரல் வேண்டும்எனவேண்டிக்கொண்டனர்.

இறைவரும். நம்பி முகம்நோக்கித் "துன்பம்ஒழிநீ, யாம்உனக்கோர் தூதனாகி இப்பொழுதே பறவைபாற்போகின்றோம்." என்றருள் செய்து பரவையார் திருமாளிகையை நோக்கிஎய்துமவர்கள் பின்தொடரத் திரைநீர் தொடர்சடையில் அரவுதொடக், கொன்றை மாலையிற்சுரும்பு தொடர, உடன் மறைகள் தொடர, வன்றொண்டர் மனமுந்தொடரத், திருவாரூர் ஒருவீதியிலே சிவலோகம் முழுதுங்காணஉளதாம்படிசென்று, தம்முடன் வந்தவர்கள் நிற்கத் தாம்தனியேஒரு அருச்சகர் கோலமாய் வாயிற் கதவருகில் வந்து 'பரவாய்! திறவாய்' என்றழைத்தனர்.

ப்ரவையாரும், இதுவன்மீகநாதரைப் பூசிக்கும் அருச்சசர் குரலாயிருக்கிறதென்று, கதவுதிறந்துவந்தது அவரைவணங்கி, " மூழுதும் உறங்கும் பொழுதின் கண்மின்னும் மணிநூலணி மார்பீர் எய்தவேண்டிற்றுஎன் " என்ன இறைவர் ' இவர் ' நங்கைநீமறுது செய்யின் நான்வதந்ததுஉரைப்பதுஎன்ன, அவர்இங்கெனக்கிசையுமாகில் இசையலாம் என்றுசொல்லி, என்நினைந்து அங்ஙணதது என்பால் என்ன இறைவர் இங்குநப்பிவரல் வேண்டும் என்னலும் அவர் ' பங்குனித்திருநாளுக்குப் பண்டுபோல் வருவராக, இங்கு எனைப்பிரிந்து போய், ஒற்றியூர் எய்தியங்கே சங்கிலித்தொடக்குண்டாருக் இங்கு ஒருசார்வுஉண்டோ? நீர்கங்குலின் வந்து சொன்னகாரியம் அழகிது என்ன, இறைவன் மீண்டும் வேண்டலும், அவர் " ஒற்றியூர் உறுதி பெற்றூர் வருவதற்கிசைபேன் நீரும்போம் ' எனச்சினந்து சொன்ன அளவில், இறைவர் திருமிவருவாராயினர்.

இங்றைவண் இரைத்தூதுவிட்டு வரவுபார்த்திருந்த நாயனாரும் ' போய் அவள்மனையில் நண்ணும்புண்ணியர் என்நசெதாரோ? நாயனார்தம்மைக்கண்டால் நன்னுதல் மறுக்குமோதான் சேயிழைதுனிதீர்த்தன்றி மீள்வதுசெய்யார் என்னும் உறுதியுடனே, வழிஎதிர் கொள்ளச்செல்வர்; வரவு காணாது மீள்வழ்; அழிவுறமயங்கி நிற்பர்; அசைவுடன் இருப்பார்; நெற்றிவிழியவர் தாவ்த்தார் என்று மீளவும் எழுவர் ஆகியிருந்தநிலையில், சந்நுசெய்விக்கச்சென்றஇறைவர்தம் வருகையைக்கண்டனர்.

எனது எண்ணத்தை முடித்து வந்தனர் எம்பெருமான் என்று நகைமுகத்தோடும் இறைவரடியில் வணங்கி நின்று " இன்று இவள் புலவியெல்லாம் தீர்க்கஎழுந்தருளி அன்றுநீர் ஆண்டுகொண்ட அதனுக்கு ஏற்பவே, இன்றும் அடியேனுக்கு இரங்கி இக்காரியத்தையும் இனிது முடித்துவைத்தீர் என்று போற்றி நிற்க, இறைவர் நாயனாரைப்பார்த்து என்னசெய்வது! நம்பி! நீ நம்மை ஏவ, நாம்போய் பாவைதன் இல்லம் நண்ணி அவளுக்கு உன்திறன்எலாங்கூறவும் அவள் அதை உடன்படாது மறுத்துவிட்டனளே! இனி நாம் செய்வது யாது? எனக்கூறினர்.

(தொடரும்)

அ கந்தசாமி

வட நாட்டு நிகழ்ச்சிகள்.

ஸ்ரீ ஜகத்குரு இரேணுகாசாரியர் ஜயந்தியும், மைசூர் பிரஜாப்பிரதிநிதி சபையும்.

—)o(—

ஆண்டுதோறும் தசரா மகோற்சவ சமயத்தில் வழக்கப்படி நடைபெறும் **பிரஜாப்பிரதிநிதி சபை** இவ்வாண்டிலும் ஜகந்மோகன ஆலில் சமஸ்தான அமைச்சர் கனம் மிர்ஜா எம். இஸ்மாயில் B. A.; O. B. E., அவர்கள் தலைமையின்கண் சிறப்பாக நடைபெற்றது. பற்பல இடங்களிலிருந்து பலவுறுப்பினர்களும் வந்திருந்தார்கள். சமஸ்தான அபிவிருத்திக்குச் சாதனமான பலதீர்மானங்கள் நிறைவேறின. அவற்றுள் வீரசைவர்களுக்கே அளவிறந்த ஆனந்தத்தை உண்டாக்கத்தக்க தீர்மானமும் ஒன்றாகின்றது. அத்தீர்மானமாவது ;—"**ஸ்ரீ ரேணுகாசாரியர் ஜயந்தி ரஜா**" என்ற பெயரில் நிறைவேறியது. தயாளசிலராகிய மைசூர் அரசாங்கத்தார் தமது நாட்டிலுள்ள ஒவ்வொரு மதத்தாபனாசாரியர்களுடைய ஜயந்திக்கும் விடுமுறைநாள் கொடுத்திருந்தும், அந்த நாட்டில் புகழ்பெற்ற புராதன வீரசைவ மதத்தாபனாசாரியருடைய ஜயந்திக்கு இதுவரை விடுமுறைநாள் கொடுக்காதிருந்ததைப் பற்றி அடைந்திருந்த வீரசைவ சமூகத்தாரின் மனக்கவலை இத்தீர்மானத்தினால் நீங்க, மைசூர் அரசாங்கத்தாருக்கே ஓர் பெரும்புகழ் நிலவுவதாயிற்று. இத்தமிழ் நாட்டிலும் ஆங்காங்குள்ள வீரசைவர்கள் சபைகூடி இத்தீர்மானத்தால் தமக்குண்டாயிருக்கும் பெருமகிழ்ச்சியை "**சீப் செகரட்டரி, மைசூர் கவர்ன்மெண்டு, பெங்களூர் சிடி**" என்ற விலாசத்திற்கு எழுதித்தெரிவித்துக்கொள்வது நலமாகும். தீர்மானத்தை ஆங்கிலத்தில் எழுதிடைப் செய்து அனுப்புதல் வேண்டும்.

பத்திராசிரியர்.

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

மயிலம் தேவஸ்தானம் கந்தசஷ்டி மகோற்சவம்,

கலியுக வரதனாக விளங்கும் சத்திவேற் கரத்தெம் பெருமானாகிய முருகப்பெருமான் சூரனாதியரை வதைத்து, இந்திரன் வேண்டுகோட்கிணங்கித் தெய்வயானை யாரைத் திருமணஞ்செய்து, தேவர் முதலிய யாவர்க்கும் வேண்டியவாறு அருள்பாலிக்கும் கருணைப்பெருக்கை குறிப்பிடுவதே இந்த மகோற்சவத்தின் உட்கருத்தெனவும், இக்கத்தும் இந்த சஷ்டி விரதத்தை முறையாக அநுஷ்டிப்பவர் வேண் நலன்களை யடைகின்றாரெனவும் அன்பரறிவர். இத்தகைய உ மயிலந் தேவஸ்தானத்திலும், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞ மடாலயத்திலும் சிறப்பாக நடைபெற்றதெனக் கேட்டு கின்றோம்.

நமது சந்தாநேயர்கட்கோர் விண்ணப்பம்:—

கனந்தங்கிய ஐயன்மீர்!

சென்ற 4. 11. 29 திங்களன்று வெளிவரவேண்டிய வீரசைவம், வேலைத்தவக்கத்தால் இவ்வாரம் வெளிவரநேர்ந்தமைக்கு நேயர்கள் மன்னிப்பார்களாக. இவ்வெளியீடு பதினொன்ருவது இதழென்பதும், அடுத்த டிசம்பரில் வெளிவரவேண்டியது பனிரெண்டாவது இதழென்பதும், 1930 ஜனவரியில் இரண்டாவது மலர் தொடங்கப்பெறும் என்பதும் நேயர்களால் அறியப்படாதன அல்லவே, இம்முதலாவதாண்டில் நமது வீரசைவத்தின் 12-வது இதழும் தவிராது வெளிவந்து தமக்குக்கிடைக்கப்பெறும் எனத் துணிதற்கிடமிருந்தும் இன்றளவும் சிலசந்தாநேயர்கள் சிறுதொகையாகிய சந்தா ரூ. 2—0—0 யும் அனுப்பிவைக்காமல் பராமுகமாக இருக்கின்ருர்கள். ஆயுட்சந்தாதாரராக முன்னரே கையொப்புமிடாத சிலரும் புதிதாகச்சேர்ந்து பொருளுதவி செய்துவருவதைக்கண்டும் முன்னரே கையொப்பமிட்டவர்களிற் சிலர் இன்னும் ஆயுட்சந்தாவை அனுப்பிவைக்காமலிருக்கின்ருர்கள். அத்தகய பெரியாரது கருத்துப் பெருநோக்கம் பற்றியதாயிருப்பினும், இதன் சம்பந்தமானபணியை மேற்கொண்டிருப்பவர் தம்பணியை முடிவுறக்காட்டுதற்கும், பின்னும் ஊக்கத்துடன் முயல்வதற்கும் துணையாக இதனைக்கண்டவுடன் வருடசந்தாவையும், ஆயுட் சந்தாவையும் அனுப்பி ஆதரிப்பார்களென வேண்டுகின்ருேம்,

இங்ஙனம்,

நிறைவேற்றற் கழகத்தார்.

வேண்டுவதொன்று.

நமது வீரசைவமென்னும் மாதவெளியீட்டிற்கு ஆங்காங்குச்சில தொண்டர்கள் (ஏஜண்டுகள்) வேண்டும். தொண்டர்என்னும் பொறுப்பு ...ற்றுக்கொள்பவர் ஆங்காங்குச் சந்தாக்களைச் சேர்த்து கையொப்பம் ...கியாவது, மணியார்டர் செய்தாவது வீரசைவத்தைப் பரவச்செய்ய ...டும். இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் தொண்டர்கட்கு ஏற்ப ...ணியார்டர் கமிஷன் முதலிய செலவை ஒப்புக்கொள்வதுடன் சந்தா ... பத்திரிகையும் அனுப்பப்படும். தொண்டராவோர் டிசம்பர் 20 ...விவித்துக்கொள்ளுதல் வேண்டும்.

பத்திராசிரியர்.